

# 2012

# சரோஜினி நாயுடு பரிசு

**தி ஹங்கர் புராஜக்ட்** – இந்திய, உருவாக்கப்பட்ட **"சரோஜினி நாயுடு பரிசானது"** 2001 ஆம் ஆண்டு முதற்கொண்டு நாளிதழிகளுடன் கூட்டாக இணைந்து ஆரம்பிக்கப்பட்டது. இப்போட்டியின் முக்கிய நோக்கமே, பெண்களைக் குறித்தும் அவர்களது தலைமைப் பண்புகள் மற்றும் கிராமம் உள்ளாட்சியில் அவர்களின் பங்களிப்புகளை ஊடகம் மூலமாக உலகிற்கு பறைசாற்றுவதேயாகும். ஆண்டுதோறும் இப்போட்டியின் மூலம் தி ஹங்கர் புராஜக்ட் அமைப்பு, பெண்களை சமுதாயப் பணியில் முன்னிலைப்படுத்துவது மட்டுமில்லாது செய்தி ஊடகங்களையும் இது போன்ற செய்திகளை பெரிதும் வெளியிட உற்சாகப்படுத்துகின்றது.

கிராமப்புறப் பெண்கள் தங்கள் கிராமம் குறித்து முடிவெடுப்பதில், தங்களுடைய பங்கினையும் மற்றும் பொறுப்பினையும் சமிபக்காலமாக உணர்ந்து வருகிறார்கள் என்பதை நாம் இத்தருணத்தில் உறுதிபட கூற முடியும். கிராமங்களிலிருந்து பெறப்படும் தகவல்கள் உதாசினப்படுத்தப்பட்ட காலம் மாறி, இன்று சரியான முறையில் அங்கீகரிக்கப்படுகிறது. பத்திரிகை செய்திகளும் தனிப்பட்ட ஆய்வுகளும், பெரும்பாலான தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள், ஆட்சித்திறனின் நுட்பங்களை அறிந்து கொள்வதில் முனைப்பாக ஈடுபட்டுள்ளார்கள் என்பதைக் காட்டுகின்றன. இதுநாள் வரை அதிகம் கவனம் செலுத்தப்படாத விஷயங்களான, தண்ணீர்ப் பிரச்சினை, மதுப்பழக்கம், ஆரம்பக் கல்வி, பொது சுகாதாரம், பெண்கள் மீது ஏவப்படும் வன்முறை, பால் அடிப்படையில் இழைக்கப்படும் அநீதிகள் ஆகிய விஷயங்களில் அரசை செயல்படத் தூண்டுவதன் மூலம், உள்ளாட்சி என்பதில் பெண்கள் மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த அமைதிப் புரட்சி குறித்துக் குரல் எழுப்ப வேண்டியது இன்று அவசியமாகிறது. அடித்தட்டுப் பெண்களின் இந்த வெற்றிக் கதைகளை நகர்ப்புறத்தில் வசிக்கும் கொள்கை வகுப்பவர்கள், அறிவு ஜீவிகள், கல்வியாளர்கள், சமூக அமைப்புக்கள், மேல்தட்டு வர்க்கம், பொதுமக்கள் ஆகியோரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லவேண்டிய தேவையிருக்கிறது. நம் ஜனநாயகத்தின் இந்தப் புதிய பெண் தலைவர்கள் தங்கள் கிராமங்களுக்கு ஆற்றியுள்ள பங்களிப்புக் குறித்து நம் ஊடகங்கள் பாரபட்சமற்று மதிப்பீடு செய்து வெளியிட வேண்டிய நேரம் வந்துவிட்டது.

பெண் உள்ளாட்சித் தலைவர்களது சாதனைச் சரித்திரத்தை வெளியிடும் ஊடகங்களுக்கு ஊக்கமும் ஆதரவும் அளிக்க தி ஹங்கர் புராஜக்ட் உறுதி கொண்டுள்ளது.

## பரிசு:

### ரொக்கப்பரிசு : ஒவ்வொரு பிரிவுக்கும் ரூ. இரண்டு லட்சம்

ஆங்கிலம், இந்தி, இந்திய மொழிகள் என்ற மூன்று பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவுக்கும் தலா, இரண்டு லட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவிலும், நாளிதழ்கள் அல்லது பருவ இதழ்களில், மேலே விவரித்துள்ளபடி, பஞ்சாயத்து அமைப்பில் பெண்கள் அளித்து வரும் பங்களிப்புக் குறித்து வெளியான மிகச் சிறந்த கட்டுரைகளை அதை எழுதிய செய்தியாளர்களை கௌரவிக்கும் வகையில் ரூபாய் இரண்டு லட்சம் பரிசாக அளிக்கப்படுகிறது.

## இறுதித் தேதி

கட்டுரைகள் தி ஹங்கர் புராஜக்ட் தில்லி அலுவலகத்தையோ அல்லது சென்னை அலுவலகத்தையோ ஜூன் 15 2012க்குள் வந்து சேர வேண்டும். இந்தத் தேதிக்குப் பின் வருபவை பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்.

## தகுதிகள்

- அனைத்து கட்டுரைகளும் பெண்கள் மற்றும் பஞ்சாயத்ராஜ் பற்றியதாக இருக்க வேண்டும். கட்டுரைகள் தனியாக பெண்களை பற்றியோ அல்லது பஞ்சாயத்ராஜ் பற்றியோ இருந்தால் இக்கட்டுரை ஏற்றுக்கொள்ள இயலாது.
- இந்த பரிசானது பெண்கள் மற்றும் பஞ்சாயத்ராஜ் பற்றிய நிறைவான கட்டுரைகளை வரவேற்கிறது.
- அனைத்து அச்சு பத்திரிக்கை எழுத்தாளர்களும் இப்பரிசுக்கு விண்ணப்பிக்கலாம். மாநில மொழிகளில் எழுதும் பத்திரிக்கையாளர்களின் கட்டுரை ஊக்குவிக்கப்படும்.
- தி ஹங்கர் ப்ராஜக்ட் பணியாளர்கள் மற்றும் அதன் தோழமை நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் இப்பரிசுக்கு விண்ணப்பிக்கக் கூடாது.
- அனைத்து பதிவுகளும் ஏதேனும் ஒரு செய்தித்தாள்களிலோ அல்லது இதழ்களிலோ 16 ஜீன் 2011 முதல் 15 ஜீன் 2012 க்குள் பிரசுரமாயிருக்க வேண்டும்.
- அனைத்து பதிவுகளும் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையின் பிரதி மற்றும் அதை எழுதியவர் பெயர் அவருடைய சிறிய வாழ்க்கை வரலாறு, முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் ஆகியவை இணைக்கப்பட வேண்டும்.
- அனைத்து பதிவுகளும், வெளியான கட்டுரை தங்களுடைய சொந்த கட்டுரை தங்களுடைய சொந்த கட்டுரை என்று ஒப்புதல் அளிக்க வேண்டும்
- கட்டுரைகளுக்கு வரம்பு இல்லை
- மேல் குறிப்பிட்டுள்ள தகுதிகளைக் கொண்டிருப்பின் ஒருவரே எத்தனை படைப்புகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்

## நடுவர் குழு:

முனைவர். ஜார்ஜ் மாத்யூ
இயக்குநர், சமூக அறிவியல் நிறுவனம்

திருமிகு. ஊர்வசி பூடாலியா
உதவி அமைப்பாளர் - பெண்களுக்கான அரும்புகள் - இயக்குநர், சுபான்

திருமிகு. மணிமாலா
இயக்குனர், மாற்றத்திற்கான ஊடகம்

திருமிகு. பமீலா பிலிபோசு
இயக்குனர், பெண்களுக்கான சிறப்புசேவை

முனைவர். எஸ்.எஸ். மீனாக்ஷி சுந்தரம்
மேலாண்மை துணை தலைவர், மைராடா

## இதுவரை பரிசு பெற்றவர்கள்:

| | | |
|---|---|---|
| 2011 | : | திருமதி. அதீதி பதுரி, திருமதி. நர்ஜீஸ் ஊசைன், திரு. குருவப்பா என்.டி.பெலிபுனி |
| 2010 | : | திருமதி. பிரீத்தி நாகராஜ், திருமதி. ரும்னி கோஷ், திருமதி. பூர்னாலி பொருவா |
| 2009 | : | திரு. ரோனால்டு அனில் பெர்னாண்டஸ், திரு. அமர்பால் சிங் வர்மா, திருமிகு. ஜி. மீனாக்ஷி, திரு விஜய் கோர்மார் (நடுவர்களின் சிறப்புப் பரிசு) |
| 2008 | : | திரு. ராதேஷியாம் யாதவ், திரு. விபாஷ் குமார் ஜா, திரு. பொன் தனசேகரன், திரு. அகந்த் (நடுவர்களின் சிறப்புப் பரிசு) |
| 2007 | : | திருமதி. தெரசா ரஹ்மான், திரு. பன்வர் மேக்வன்ஷி, திரு. வி.ஆர். ஜோதிஷ் குமார் |
| 2006 | : | திருமதி. சையீத் ஜாகீர் உசேன், முனைவர், கவிந்திர நாராயண் ஸ்ரீவத்சவா, திரு. ஹேமந்த் பர்மன், திரு. சுரையா நியாசி (நடுவர்களின் சிறப்புப் பரிசு) |
| 2005 | : | திரு. பாரத் டோக்ரா, திருமதி. கீதா இளங்கோவன், திருமதி. விமல் குப்தா, திரு. தாஷி மரூப் (நடுவர்களின் சிறப்புப் பரிசு) |
| 2004 | : | முனைவர் ரூபா மங்களானி, செல்வி சுஷ்மா மாளவியா, திரு. அருண் ராம் |
| 2003 | : | செல்வி. மைத்ரேயி புஷ்பா, திரு. ஜாக்விம் பெர்ணாண்டஸ், திரு. திலீப் சந்தன் |
| 2002 | : | திருமதி. மம்தா ஜெட்லி, திரு. தீபக் திவாரி |
| 2001 | : | திரு. ராஜேந்தர் பந்து, செல்வி. வாசவி, திரு. யோகேஷ் வாஜ்பாயி, திரு. கே.பி.எம்.பஷீர், திருமதி. கே.ஆர். மங்களா, திரு. சுமன் தத்தா |

## படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரிகள்

**தலைமை அலுவலகம்:**
The Hunger Project
Shaheed Bhawan,
18/1, Aruna Asaf Ali Marg,
Qutab Institutional Area,
New Delhi 110 067
Website : **www.thpindia.org**

தமிழ்நாடு அலுவலகம்:
தி ஹங்கர் புராஜக்ட்
1, இரண்டாவது தெரு
நேரு நகர், அடையாறு
சென்னை - 600 020
தொலைபேசி : 044-24452520
மின்னஞ்சல் : gayathri.samraj@thp.org

THE HUNGER PROJECT